# அலகு 10

# கணினி கணக்கியல் முறை – Tally

## பொருளடக்கம்


10.1 அறிமுகம்

10.2 கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகள்

10.3 தானியங்கும் கணக்கியல் முறை

10.4 கணக்கியல் அறிக்கைகளை வடிவமைத்தல்

10.5 பிற தகவல் அமைப்புடன் தரவு பரிமாற்றம்

10.6 கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடு – Tally with GST package

10.7 கணக்கியல் மென்பொருளின் நடைமுறைப் பயன்பாடு – Tally.ERP 9


## நினைவு கூற வேண்டிய கருத்துகள்

கணினிமயக் கணக்கியல் முறை – Tally கற்பதற்கு முன் கீழ்க்கண்டவற்றை நினைவு கூற வேண்டும்:

- அடிப்படை கணக்கியல் கோட்பாடுகள்
- இரட்டைப் பதிவுமுறை
- அடிப்படை கணக்கியல் விதிகள்
- கணினிமயக் கணக்கியல் முறை
- குறிப்பேடு தயாரித்தல்
- துணை ஏடுகள்
- பேரேட்டில் எடுத்தெழுதுதல்
- இறுதிக் கணக்குகள்

## கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள்

- தானியங்கும் கணக்கியல் முறையை புரிந்துகொள்ளுதல்
- Tally.ERP9ஐப் பயன்படுத்தி கணக்கேடுகளை பராமரித்தல் மற்றும் அறிக்கைகளை உருவாக்குதல்

## தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய சொற்கள்

5UIZEA

- Tally–ன் நுழைவாயில்
- கணக்கியல் குழுக்கள்
- கணக்கியல் பண்புகள்
- பெறுதல் சான்றாவணம்
- செலுத்தல் சான்றாவணம்
- எதிர்ப்பதிவு
- கொள்முதல் சான்றாவணம்
- விற்பனை சான்றாவணம்
- உரிய குறிப்பேடு



12th-Accountancy-Unit-10.indd 327 1/4/2020 3:50:39 PM

## 10.1 அறிமுகம்

**மாணவர் செயல்பாடு 10.1**

தானியங்கும் கணக்கியல் முறை எந்த அளவிற்கு கணக்கியல் ஏடுகளை பராமரிப்பதற்கு பயனுள்ளதாக உள்ளது என்பதை அறிய ஒரு பெரிய நிறுவனத்தின் கணக்காளரை நேர்காணல் செய்யவும்.

கணினிமயக் கணக்கியல் முறை என்பது கணினி மூலம் கணக்குகளைப் பராமரிக்கும் முறையை குறிக்கும். இது கணக்கேடுகளை பராமரிப்பதற்கும், கணக்கியல் அறிக்கைகள் தயாரிப்பதற்கும் கணக்கியல் நடவடிக்கைகளை கணினி உதவியுடன் செயல்முறைப் படுத்துவதாகும். கணினிமயக் கணக்கியல் முறை பல்வேறு அறிக்கைகள் உருவாக்கப்படுவதற்காக, கணக்கியல் நடவடிக்கைகளை உள்ளீடாக எடுத்துக்கொண்டு அவற்றை கணக்கியல் மென்பொருள் மூலம் செயலாக்கம் பெறச்செய்கிறது.

## 10.2 கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகள்

கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகள் பின்வருமாறு:

1. **கணக்கேடுகளைப் பராமரித்தல்:** கணினிமயக் கணக்கியல் முறையில் கணக்கேடுகளை எளிதாகவும் திறம்பட நீண்ட காலங்களுக்கு பராமரிக்கலாம். இதற்கு அதிகப் படியான இடவசதி தேவையில்லை. தரவு மற்றும் தகவல்களை விரைவாகவும் துல்லியமாகவும் எடுக்க இது வழிவகை செய்கிறது.
2. **சரக்கிருப்பு மேலாண்மை:** கணினிமயக் கணக்கியல் முறை திறம்பட்ட சரக்கிருப்பு மேலாண்மைக்கு வழிவகை செய்கிறது. வேகமாக நகரும், மெதுவாக நகரும் மற்றும் வழக்கொழிந்த சரக்கிருப்பை கண்டறியலாம். சரக்கிருப்பு, சரக்கிருப்பு அளவுகள் போன்றவற்றின் மேம்படுத்தப்பட்ட தகவல்களை உடனுக்குடன் எடுக்கலாம்.
3. **சம்பளப் பட்டியல் தயாரித்தல்:** சம்பளப் பட்டியலானது பணியாளர்களுக்கு கொடுக்கவேண்டிய தொகையினை கணக்கீடு செய்வதாகும். பணியாளர்களின் சம்பளமானது வேலை செய்த மணி நேரம் அல்லது நாட்கள் அல்லது உற்பத்தி அலகுகள் அடிப்படையில் கணக்கிடப்படலாம். கணினிமய கணக்கியல் முறை பணியாளர்களின் வருகையைப் பதிகிறது, சம்பளத் தொகையைக் கணக்கிடுகிறது, சேமநல நிதி மற்றும் வருமான வரி போன்ற பிடித்தங்களையும் செய்கிறது.
4. **அறிக்கை உருவாக்குதல்:** கணினிமயக் கணக்கியல் முறை பல்வேறு வழக்கமான மற்றும் குறிப்பிட்ட நோக்க அறிக்கைகள் உருவாக்குவதற்கு உதவி புரிகிறது.
5. **தரவு அனுப்புதல்/பெறுதல்:** கணக்கியல் தரவு மற்றும் தகவல்களை நிறுவனத்தின் உள்ளேயோ அல்லது நிறுவனத்திற்கு வெளியேவோ உள்ள வேறு ஒரு பயனரிடம் இருந்து அனுப்பலாம் அல்லது பெறலாம்.
6. **வரிவிதிப்பு:** கணினிமயக் கணக்கியல் முறை பல்வேறு வரிகளை கணக்கீடு செய்யவும் அதை பிடித்தம் செய்து அரசாங்க கணக்கில் செலுத்துவதற்கும் உதவி புரிகிறது.

## 10.3 தானியங்கும் கணக்கியல் முறை

தானியங்கும் கணக்கியல் என்பது கணக்கியல் மென்பொருள் உதவியுடன் கணக்கேடுகளை உடனடியாக பராமரிக்கும் அணுகுமுறையாகும். கையால் எழுதும் கணக்கியல் முறையில் வெவ்வேறு கணக்கேடுகளில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் கணக்கியல் மென்பொருள் தொகுப்புகள் ஒரு புலம் அல்லது ஒரு இடத்தில் கையால் பதிய அனுமதிக்கிறது. அந்த புலம் அல்லது இடத்தில் இருந்து மென்பொருளானது தானாகவே நடவடிக்கையை மென்பொருள் தொகுப்பில் உள்ள மற்ற அனைத்து உரிய ஏடுகளுக்கு தொடர்புப்படுத்துகிறது.



12th-Accountancy-Unit-10.indd 328 1/4/2020 3:50:39 PM

## 10.4 கணக்கியல் அறிக்கைகளை வடிவமைத்தல்

கணக்கியல் அறிக்கையானது ஒரு நிறுவனத்தின் கணக்கேடுகளில் இருந்து பெறப்பட்ட கணக்கியல் தகவல் தொகுப்பு ஆகும். கணக்கியல் அறிக்கைகளை வழக்கமான அறிக்கைகள் மற்றும் குறிப்பிட்ட நோக்க அறிக்கைகள் என வகைப்படுத்தலாம்.

வழக்கமான கணக்கியல் அறிக்கைகள்

(அ) நாளேடு/குறிப்பேடு
(ஆ) பேரேடு
(இ) இருப்பாய்வு
(ஈ) இலாப அறிக்கை
(உ) இருப்பு நிலைக் குறிப்பு
(ஊ) ரொக்க ஓட்ட அறிக்கை

வழக்கமான கணக்கியல் அறிக்கைகள் தவிர பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் அறிக்கை குறிப்பிட்ட நோக்க அறிக்கை எனப்படும்.

கணக்கியல் அறிக்கைகளை வடிவமைத்தலின் படிநிலைகள் பின்வருமாறு:

1. அறிக்கை உருவாக்குவதின் நோக்கத்தை வரையறுக்கவும்
2. அறிக்கையின் கட்டமைப்பை குறிப்பிடவும்
3. தரவுத்தளத்துடன் தொடர்புகொண்டு ஏடுகளில் இருந்து தரவுகளை எடுக்க, மாற்றம் செய்ய, சேர்க்க அல்லது அழிக்க தரவுத்தள கேள்விகளை உருவாக்கவும்.

## 10.5 பிற தகவல் அமைப்புடன் தரவு பரிமாற்றம்

மேலாண்மைதகவல்அமைப்புஎன்பதுமேலாண்மையின்அனைத்துநிலைகளிலும்முடிவெடுப்பதற்கு தேவையான தகவலை அளிக்கும் ஒரு முறையாகும். உற்பத்தி தகவல் அமைப்பு, சந்தையிடுதல் தகவல் அமைப்பு, மனிதவள தகவல் அமைப்பு மற்றும் கணக்கியல் தகவல் அமைப்பு ஆகியவை இதில் அடங்கும். கணக்கியல் தகவல் அமைப்பு, நிதியியல் தரவுகளை சேகரித்து அதை செயலாக்கப்பெறச் செய்து பல்வேறு பயனர்களுக்கு தகவலாக அளிக்கிறது. தகவல் அளிப்பதற்கு, உற்பத்தி, சந்தையிடுதல், மற்றும் மனிதவளம் போன்ற தகவல் அமைப்புகளின் தரவு, கணக்கியல் தகவல் அமைப்பிற்கு தேவைப்படுகின்றது. அதுபோன்று, மற்ற தகவல் அமைப்புகள் தகவல் அளிப்பதற்கு கணக்கியல் தகவல் அமைப்பின் தரவு தேவைப்படுகின்றது. எனவே, தகவல் அமைப்புகளுக்கு இடையேயான தரவு பரிமாற்றம் தவிர்க்க முடியாதது. எடுத்துக்காட்டாக, செலுத்த வேண்டிய கூலி தொகையை கணக்கிட, கணக்கியல் தகவல் அமைப்பிற்கு, உற்பத்தி தகவல் அமைப்பு மற்றும் மனிதவள தகவல் அமைப்பிலிருந்து தரவு தேவைப்படுகின்றது.

## 10.6 கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடு – Tally with GST package

Tally, மிகவும் பரவலாக பயன்படுத்தும் நிதியியல் கணக்கியல் மென்பொருள்களில் ஒன்றாகும். இது பல்வேறு வகையான வியாபார மற்றும் தொழில் நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகிறது. இது பலமொழி செயல்பாடு, நிகழ்நிலை செயற்கூறுகள், சட்டரீதியாக ஏற்புடைய அறிக்கைகள் போன்ற பல்வேறு வசதிகளுடனான விரிவான வணிக கணக்கியல் மற்றும் சரக்கிருப்பு மேலாண்மை மென்பொருள் ஆகும்.

2009–ம் ஆண்டு Tally Solutions, Tally.ERP 9 எனும் மென்பொருளை அறிமுகம் செய்தது. இந்த மென்பொருள் விரிவான வணிக மேலாண்மைக்கு தீர்வு அளிக்கிறது. இது அனைத்து கணக்கேடுகளையும் பராமரிக்கும். பெறுதல், செலுத்தல், விற்பனை, கொள்முதல் போன்ற பல்வேறுவகையான சான்றாவணங்களை பயன்படுத்தி நடவடிக்கைகளை பதிவு செய்யலாம். இது இரட்டைப்பதிவு முறையில் கணக்கேடுகளை பராமரிக்கிறது. 2017–ம் ஆண்டு, இந்திய சரக்கு மற்றும் சேவை வரிக்கு தேவைக்கு ஏற்ப இது மேம்படுத்தப்பட்டது.

## 10.7 கணக்கியல் மென்பொருளின் நடைமுறைப் பயன்பாடு – Tally.ERP 9

கணக்கியல் மென்பொருளில் செய்முறைப் பயிற்சி – Tally

**1. Starting Tally (Tally–ஐ துவங்க)**

பின்வரும் ஏதேனும் ஒரு வழியில் Tally–ஐ துவங்கலாம்



12th-Accountancy-Unit-10.indd 329 1/4/2020 3:50:39 PM

Click on Start > All Programs > Tally.ERP 9 > Tally.ERP 9 icon

(or)

Click on Tally.ERP 9 icon (shortcut) on the desktop

புதியதாக நிறுவிய Tally யைத் திறந்தவுடன், படம் 10.1–ல் உள்ளவாறு திரை தோன்றும்.




படம் 10.1 புதியதாக நிறுவிய Tally திரை

Tally யைத் துவங்கியவுடன், உபயோகிக்கும் முறையை விருப்பங்கள் வரிசையிலிருந்து தெரிவு செய்யவும். அங்கீகரிக்கப்பட்ட எண் இருந்தால், 'Activate Your License' தெரிவு செய்யவும் இல்லையெனில் 'Work in Education Mode' தெரிவு செய்யவும்.

உங்களுக்குத் தெரியுமா?

Tally.ERP 9 Work in Education Mode முறையில் உபயோகப்படுத்தலாம். ஆனால், 1, 2 மற்றும் 31 ஆகிய தேதிகளை மட்டுமே நடவடிக்கைகளைப் பதிவு செய்ய பயன்படுத்தமுடியும்.

செய்முறை பயிற்சிக்காக 'Work in Education Mode' தெரிவு செய்யப்பட்டுள்ளது. தெரிவு செய்தபின், படம் 10.2–ல் உள்ளவாறு திரை தோன்றும்.

**2. கம்பெனி உருவாக்குதல் (Creation of a company)**

கணக்குகளை பராமரிக்கவேண்டிய நிறுவனத்தின் விவரங்களை Tally–ல் தருவது அத்தியாவசியமானது. கம்பெனி உருவாக்குவதற்கு கீழ்க்கண்ட படிகளை பின்பற்ற வேண்டும்:

Company Info > Create Company

கம்பெனி உருவாக்கு (Create Company) என்று Tally–ன் முதல் திரையில் தெரிவு செய்தபின், கம்பெனி உருவாக்கு திரை, படம் 10.3–ல் உள்ளவாறு திரை தோன்றும்.

பெயர், முகவரி, ஏடுகள் மற்றும் நிதியாண்டு விவரங்கள், பாதுகாப்பு கட்டுப்பாடு, அடிப்படை நாணய தகவல் மற்றும் பலவற்றை Tally கேட்கும். தற்பொழுது, Tally–க்கு தேவையான நிறுவனத்தின் அனைத்து விவரங்களையும் அளிக்கவும். அனைத்து பதிவுகளையும் முடித்த பின் தரவுகளை ஏற்று நிறுவனத்தை உருவாக்குவதற்கு 'Yes' என தெரிவு செய்யவும்.



12th-Accountancy-Unit-10.indd 330 1/4/2020 3:50:39 PM




படம் 10.2 Tally–ன் முதல் திரை




படம் 10.3 கம்பெனி உருவாக்கு திரை

## மாணவர் குறிப்பு

செய்முறை பயிற்சிக்காக பெயர் மட்டும் பதிவு செய்து மற்ற அனைத்தையும் அதில் உள்ளவாறே இருக்கும்படி செய்யவும்.

மேற்கண்ட வழிமுறையைப் பின்பற்றி பல நிறுவனங்களை உருவாக்கலாம்.



12th-Accountancy-Unit-10.indd 331 1/4/2020 3:50:40 PM

### 3. டேலியின் நுழைவாயில் (Gateway of Tally)

ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்கிய பின்பும் ஒவ்வொரு முறை Tally–ஐ துவக்கும் போதும் Tally யின் திரை, படம் 10.4–ல் உள்ளவாறு தோன்றும். இந்தத் திரையே டேலியின் நுழைவாயில் (Gateway of Tally) என அழைக்கப்படுகிறது. இது தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தை இடது பலகத்தில் காண்பிக்கும்.

டேலியின் நுழைவாயில், நடவடிக்கைகள் மற்றும் அறிக்கைகள் போன்ற பட்டியல் விருப்பங்களுடன் வலது பலகத்தில் காண்பிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பட்டியல் விருப்பத்தின் குறுக்குவழி விசையானது அதன் பெயரில் சிவப்பு மையினால் முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு எழுத்து ஆகும்.

Tally.ERP 9–உடன் எளிதாக தொடர்பு கொள்வதற்காக F1 மற்றும் F2 போன்ற பொத்தான்கள் அடங்கிய செங்குத்து பொத்தான் பட்டையானது திரையின் வலதுபுற கடைசியில் வைக்கப்பட்டிருக்கும்.

கீழே உள்ள கிடைமட்ட தகவல் பலகத்தில் தயாரிப்பு, பதிப்பு, உரிமம், கட்டமைப்பு மற்றும் கணிப்பான் போன்றவற்றின் விவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

டேலியின் நுழைவாயில் (Gateway of Tally) கீழுள்ளவாறு தோன்றும்:




படம் 10.4 Tally–யின் நுழைவாயில்

### 4. Tally–ல் இருந்து வெளியேறுதல் (Closing Tally)

கீழ்க்கண்ட இரண்டு வழிகளில் Tally–ல் இருந்து வெளியேறலாம்

Press Esc Key > Press Enter or Y or Click on Yes

(or)

Press Ctrl + Q

### 5. நிறுவனத்தைத் தெரிவு செய்தல் (Select a company)

பல நிறுவனங்களை உருவாக்கியிருப்பின் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தைத் தெரிவு செய்ய, Tally–ஐ திறந்தவுடன் செங்குத்து பொத்தான் பட்டியிலிருந்து F1–ஐ (Select Cmp) சொடுக்கவும். Tally.ERP 9 நிறுவனத்தை தெரிவு செய் (Select Company) எனும் திரையை ஏற்கனவே உருவாக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியலுடன் காண்பிக்கும். கணக்குகள் பராமரிக்கப்படவேண்டிய அந்த நிறுவனத்தை தெரிவு செய்யவும்.



12th-Accountancy-Unit-10.indd 332 1/4/2020 3:50:40 PM

**6. நிறுவனத்தின் பண்புகூறுகள் (Company features)**

நிறுவனங்களை உருவாக்கிய பின் Tally.ERP 9–ன் பண்புகூறுகளை அமைவு செய்வது அவசியம். Tally. ERP 9–ல் பண்புகூறுகளானது பயனரின் தேவைக்கு ஏற்ப நிதியியல் ஏடுகளை பராமரிக்க ஏதுவான விருப்பத் தேர்வுகளாக வழங்கப்பட்ட திறன்களின் தொகுப்பு ஆகும். நிறுவனத்தின் பண்புகூறுகள் பட்டியலுக்கு செல்வதற்கு செங்குத்து பொத்தான் பட்டையிலிருந்து F11: Features–ஐ சொடுக்கவும். கணக்கியல் பண்புகூறுகள், சரக்கு விவர பண்புகூறுகள் போன்றவைகளை இது கொண்டுள்ளது. படம் 10.5–ல் காண்பித்துள்ளவாறு நிறுவனத்தின் பண்புகூறுகள் திரை தோன்றும்.




படம் 10.5 நிறுவனத்தின் பண்புகூறுகள் திரை

**7. கணக்கியல் பண்புகூறுகள் (Accounting features)**

'Maintain accounts only', 'Integrate accounts and inventory' and 'use Income and Expenses A/c instead of Profit and Loss A/c' ஆகியவை பொதுவான கணக்கியல் பண்புகூறுகளில் அடங்கும். மற்ற பிற கணக்கியல் பண்புகூறுகளில் Invoicing, Banking Features போன்றவை அடங்கும்.

செய்முறை பயிற்சிக்கு, கணக்கியல் பண்புகூறுகள் மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. சரக்கு விவர பண்புகூறுகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

நிறுவனத்தின் பண்புகூறுகள் பட்டியிலிருந்து கணக்கியல் பண்புகூறுகள் தெரிவு செய்யவும். பொதுவான கணக்கியல் பண்புகூறுகளின் கீழே 'Maintain accounts only' என்பதற்கு 'ஆம்' (Yes) எனும் விருப்பத்தை தெரிவு செய்யவும். மற்ற அனைத்து பண்புகூறுகளில் மாற்றம் செய்யாமல் 'ஆம்' (Yes) என ஏற்கவும்.

படம் 10.6–ல் காண்பித்துள்ளவாறு கணக்கியல் பண்புகூறுகள் திரை தோன்றும். (அடுத்தப்பக்கம் பார்க்கவும்)

**8. சட்டம் மற்றும் வரிவிதிப்பு பண்புகூறுகள் (Statutory and Taxation features)**

சட்டம் மற்றும் வரிவிதிப்பு பண்புகூறுகளில் சரக்கு மற்றும் சேவை வரி (GST) மதிப்பு கூட்டப்பட்ட வரி (VAT) மற்றும் வருமான மூலத்திலிருந்து வருமானவரி பிடித்தம் (TDS) ஆகியவை அடங்கும். சரக்கு மற்றும் சேவை வரியை செயல்படுத்த 'Enable Goods and Services Tax' என்பதற்கு 'ஆம்' (Yes) எனும் விருப்பத்தை தெரிவு செய்யவும். செய்முறை பயிற்சிக்காக 'இல்லை' (No) எனும் விருப்பத்தை தெரிவு செய்யவும்.



12th-Accountancy-Unit-10.indd 333 1/4/2020 3:50:40 PM




படம் 10.6 கணக்கின் பண்புகூறுகள் திரை

**9. கணக்கியல் குழுக்களை உருவாக்குதல் (Creating Accounting Groups)**

Tally–ல் குழு என்பது ஒரே பண்புகளைக்கொண்ட பேரேடுகளின் தொகுப்பு ஆகும். முன்பே உருவாக்கப்பட்ட கணக்கியல் குழுக்கள் உள்ளன. பல நிறுவனங்கள் அவைகளையே கணக்கியலில் பரவலாக பயன்படுத்துகின்றன. இந்த முன்பே வரையறுக்கப்பட்ட கணக்கியல் குழுக்கள் சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினங்கள் என கணக்குகளை வகைப்படுத்தும் அடிப்படை கணக்கியல் கொள்கையுடன் ஒத்துப்போகின்றன. அவைகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன:

| | List of Groups | | List of Groups |
|---|---|---|---|
| 1 | Bank Accounts | 18 | Indirect Expenses |
| 2 | Bank OCC A/c | 19 | Indirect Incomes |
| 3 | Bank OD A/c | 20 | Investments |
| 4 | Branch / Divisions | 21 | Loans & Advances (Asset) |
| 5 | Capital Account | 22 | Loans (Liability) |
| 6 | Cash-in-Hand | 23 | Misc.Expenses (ASSET) |
| 7 | Current Assets | 24 | Provisions |
| 8 | Current Liabilities | 25 | Purchase Accounts |
| 9 | Deposits (Assets) | 26 | Reserves & Surplus |
| 10 | Direct Expenses | 27 | Retained Earnings |
| 11 | Direct Incomes | 28 | Sales Accounts |
| 12 | Duties & Taxes | 29 | Secured Loans |
| 13 | Expenses (Direct) | 30 | Stock-in-Hand |
| 14 | Expenses (Indirect) | 31 | Sundry Creditors |
| 15 | Fixed Assets | 32 | Sundry Debtors |
| 16 | Income (Direct) | 33 | Suspense A/c |
| 17 | Income (Indirect) | 34 | Unsecured Loans |

குழுக்களை முதன்மை குழுக்கள் மற்றும் துணை குழுக்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. முதல் கணக்கு, நடப்புப் பொறுப்புகள், நிலைச் சொத்துகள், நடப்புச் சொத்துகள் போன்றவை முதன்மை குழுக்களில் அடங்கும். காப்பு மற்றும் மிகுதி, பற்பல கடனீந்தோர், பற்பல கடனாளிகள் போன்றவை துணை குழுக்களில் அடங்கும்.



12th-Accountancy-Unit-10.indd 334 1/4/2020 3:50:40 PM

முன்பே வரையறுக்கப்பட்ட குழுக்களை பார்வையிட,

Gateway of Tally > Masters > Accounts Info > Groups > Single Group > Display

தெரிவு செய்தபின் Tally–யின் திரை படம் 10.7–ல் உள்ளவாறு தோன்றும்.




படம் 10.7 குழுக்களின் பட்டியல்

கூடுதலான குழுக்கள் தேவைப்பட்டால் அதனை பின்வருமாறு உருவாக்கலாம்:

Gateway of Tally > Masters > Accounts Info > Groups > Single Group > Create

## 10. பேரேட்டு கணக்குகள் (Ledger Accounts)

Tally–ல் நடவடிக்கைகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கைகளை தொடர்புடைய பேரேட்டு கணக்குடன் அடையாளம் காணவேண்டும். முன்பே வரையறுக்கப்பட்ட ரொக்கம் மற்றும் இலாப நட்டக் க/கு ஆகிய இரண்டு பேரேடுகளை Tally கொண்டுள்ளது. மற்ற பேரேடுகளை அவற்றின் தேவைக்கேற்ப பயனர் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

**பேரேடு உருவாக்குவதற்கு:**

Gateway of Tally > Masters > Accounts Info > Ledgers > Single Ledger > Create

தெரிவு செய்தபின் படம் 10.8–ல் உள்ளவாறு Tally–யின் திரை தோன்றும்.

பேரேடு உருவாக்கும்போது பெயர் மற்றும் பேரேட்டு கணக்கு எந்த குழுவின் கீழ் வகைப்படுத்த வேண்டும் என்பதை அளிக்க வேண்டும். மற்ற அனைத்து பண்புகூறுகளில் மாற்றம் செய்யாமல் 'ஆம்' (Yes) என ஏற்கவும்.

## 11. குழு மற்றும் பேரேடு மாற்றம் செய்தல் (Modification of group and ledger)

குழு மற்றும் பேரேட்டை மாற்றம் அல்லது நீக்கம் செய்யலாம். பயனர் உருவாக்கிய குழு/பேரேட்டை முழுமையாக மாற்றம் செய்யலாம். ஆனால், முன்பே வரையறுக்கப்பட்ட குழு/பேரேட்டுப் பெயர் மாற்றம் மட்டுமே செய்யலாம். முன்பே வரையறுக்கப்பட்ட குழு/பேரேட்டை நீக்க முடியாது. ஆயினும் பயனர் உருவாக்கிய குழு/பேரேட்டை நீக்க முடியும்.

பேரேட்டை நீக்க: Gateway of Tally > Masters > Accounts Info > Ledgers > Single Ledger > Alter > Select the Ledger to be deleted > Alt D > Yes




படம் 10.8 பேரேடு உருவாக்குதல்

### 12. சான்றாவணங்கள் (Vouchers)

நடவடிக்கைகளின் விவரங்களை கொண்டுள்ள ஒரு ஆவணமே சான்றாவணம் ஆகும். நடவடிக்கைகள் சான்றாவணப் பதிவுகள் மூலமே பதியப்படவேண்டும். முன்பே வரையறுக்கப்பட்ட கொள்முதல், விற்பனை, செலுத்தல், பெறுதல் மற்றும் எதிர்ப்பதிவு போன்ற சான்றாவணங்களை Tally கொண்டுள்ளது.

சான்றாவண வகைகளைப் பார்வையிட:

Gateway of Tally > Masters > Accounts Info > Voucher Types > Display

பயனரின் தேவைக்கேற்ப கூடுதல் சான்றாவண வகைகளை உருவாக்கலாம்.

பின்வரும் முக்கிய கணக்கியல் சான்றாவணங்கள் நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகின்றன:

(i) பெறுதல் சான்றாவணம்/வரவு குறிப்பு (Receipt Voucher)
(ii) செலுத்தல் சான்றாவணம்/செலுத்தல் (Payment Voucher)
(iii) எதிர்ப்பதிவு சான்றாவணம்/கான்ட்ரா (Contra Voucher)
(iv) கொள்முதல் சான்றாவணம்/ கொள்முதல் (Purchase Voucher)
(v) விற்பனை சான்றாவணம்/ விற்பனை (Sales Voucher)
(vi) உரிய குறிப்பேடு சான்றாவணம்/ஜர்னல் (Journal Voucher)

#### (i) பெறுதல் சான்றாவணம் (Receipt Voucher)

அனைத்து ரொக்கம் அல்லது வங்கியின் மூலமான பெறுதல் நடவடிக்கைகள் பெறுதல் சான்றாவணத்தைப் பயன்படுத்தி பதியப்படுகிறது. இந்த சான்றாவணத்தில் ரொக்கம் அல்லது வங்கி கணக்கு பற்று வைக்கப்பட்டு பிற பேரேட்டுக் கணக்கு வரவு வைக்கப்படும்.

பெறுதல் பதிவதற்கு:

Gateway of Tally > Transactions > Accounting Vouchers > F6:Receipt

#### (ii) செலுத்தல் சான்றாவணம் (Payment Voucher)

அனைத்து ரொக்கம் அல்லது வங்கியின் மூலமான செலுத்தல் நடவடிக்கைகள் செலுத்தல் சான்றாவணத்தைப் பயன்படுத்தி பதியப்படுகிறது. இந்த சான்றாவணத்தில் ரொக்கம் அல்லது வங்கி கணக்கு வரவு வைக்கப்பட்டு பிற பேரேட்டுக் கணக்கு பற்று வைக்கப்படும்.



12th-Accountancy-Unit-10.indd 336 1/4/2020 3:50:40 PM

செலுத்தல் பதிவதற்கு:

Gateway of Tally > Transactions > Accounting Vouchers > F5:Payment

**(iii) எதிர்ப்பதிவு சான்றாவணம் (Contra Voucher)**

ரொக்க கணக்கு மற்றும் வங்கி கணக்கு ஆகிய இரண்டும் உள்ளடங்கிய நடவடிக்கைகள் எதிர்ப்பதிவு சான்றாவணம் கொண்டு பதியப்படுகிறது. இந்த நடவடிக்கை ரொக்கம் வங்கி கணக்கில் வைப்பு செய்வதற்காகவோ அல்லது வங்கி கணக்கிலிருந்து ரொக்கம் எடுப்பதற்காகவோ இருக்கலாம்.

எதிர்ப்பதிவு பதிவதற்கு:

Gateway of Tally > Transactions > Accounting Vouchers > F4:Contra

**(iv) கொள்முதல் சான்றாவணம் (Purchase Voucher)**

கொள்முதல் சான்றாவணம் ரொக்க மற்றும் கடன் சரக்கு கொள்முதல் பதிவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

கொள்முதல் பதிவதற்கு:

Gateway of Tally > Transactions > Accounting Vouchers > F9:Purchase

**(v) விற்பனை சான்றாவணம் (Sales Voucher)**

விற்பனை சான்றாவணம் ரொக்க மற்றும் கடன் சரக்கு விற்பனை பதிவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

விற்பனை பதிவதற்கு:

Gateway of Tally > Transactions > Accounting Vouchers > F8:Sales

**(vi) உரிய குறிப்பேடு சான்றாவணம் (Journal Voucher)**

ரொக்கம், வங்கி, கொள்முதல், மற்றும் விற்பனை தவிர பிற நடவடிக்கைகளான தேய்மானம், வாராக்கடன் ஒதுக்கு போன்றவைகளை பதிவு செய்வதற்கு உரிய குறிப்பேடு சான்றாவணம் பயன்படுத்தப்படுகிறது.

ஜர்னல் பதிவதற்கு:

Gateway of Tally > Transactions > Accounting Vouchers > F7:Journal

சான்றாவணங்களைக் கொண்டு நடவடிக்கைகளை பதிவு செய்வதற்கு கணக்கியல் சான்றாவணம் உருவாக்குதலைப் பயன்படுத்த வேண்டும். கணக்கியல் சான்றாவணம் உருவாக்குதல் பெயர் மற்றும் சான்றாவண எண், சான்றாவண நாள், விவரம், பற்று மற்றும் வரவு மற்றும் விளக்கக் குறிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும்.

### செய்முறை 1

பின்வரும் நடவடிக்கைகளை Tally–ல் பதிவு செய்யவும்.

(i) ராபர்ட் ₹ 1,00,000 முதலுடன் போக்குவரத்து தொழில் துவங்கினார்.
(ii) பாரத ஸ்டேட் வங்கியில் கணக்கு துவங்கப்பட்டு ₹ 30,000 வைப்பு வைக்கப்பட்டது.
(iii) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ₹ 10,000
(iv) மொகைதீனிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 20,000
(v) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 8,000
(vi) ரத்தினத்திடமிருந்து சரக்கு வாங்கி பணம் வைப்பு இயந்திரம் மூலம் செலுத்திய தொகை ₹ 5,000
(vii) ரோனிக்கு கடனுக்கு சரக்கு விற்கப்பட்டது ₹ 60,000
(viii) அலுவலகப் பயனுக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது ₹ 9,000
(ix) மொகைதீனுக்கு காசோலை மூலம் பகுதி தொகை செலுத்தியது ₹ 10,000
(x) ரோனி பகுதி தொகையை ரொக்கமாக செலுத்தியது ₹ 5,000
(xi) பணியாளர்களுக்கு மின்னனு பரிவர்த்தனை மூலம் செலுத்திய சம்பளம் ₹ 6,000
(xii) ரொக்கமாக கூலி செலுத்தியது ₹ 3,000
(xiii) பாண்டியன் வரையறு நிறுமத்திடமிருந்து எழுதுபொருள் கடனுக்கு வாங்கியது ₹ 4,000



12th-Accountancy-Unit-10.indd 337 1/4/2020 3:50:41 PM

**தீர்வு**

நடவடிக்கைகளை பகுப்பாய்வு செய்தல், குறிப்பேட்டில் பதிவு செய்தல், சான்றாவணம் மற்றும் குழு வகையினை கண்டறிதல்:

| Sl. No. | Particulars | | Debit ₹ | Credit ₹ | Voucher type | Group |
|---|---|---|---|---|---|---|
| 1 | Cash A/c | Dr. | 1,00,000 | | Receipt | Cash-in-Hand |
| | To Robert's Capital A/c | | | 1,00,000 | Voucher | Capital Account |
| 2 | State Bank of India A/c | Dr. | 30,000 | | Contra | Bank Accounts |
| | To Cash A/c | | | 30,000 | Voucher | Cash-in-Hand |
| 3 | Furniture A/c | Dr. | 10,000 | | Payment | Fixed Assets |
| | To Cash A/c | | | 10,000 | Voucher | Cash-in-Hand |
| 4 | Purchases A/c | Dr. | 20,000 | | Purchase | Purchase Accounts |
| | To Mohaideen A/c | | | 20,000 | Voucher | Sundry Creditors |
| 5 | Cash A/c | Dr. | 8,000 | | Sales | Cash-in-Hand |
| | To Sales A/c | | | 8,000 | Voucher | Sales Accounts |
| 6 | Purchases A/c | Dr. | 5,000 | | Purchase | Purchase Accounts |
| | To Cash A/c | | | 5,000 | Voucher | Cash-in-Hand |
| 7 | Rony A/c | Dr. | 60,000 | | Sales | Sundry Debtors |
| | To Sales A/c | | | 60,000 | Voucher | Sales Accounts |
| 8 | Cash A/c | Dr. | 9,000 | | Contra | Cash-in-Hand |
| | To Bank A/c | | | 9,000 | Voucher | Bank Accounts |
| 9 | Mohaideen A/c | Dr. | 10,000 | | Payment | Sundry Creditors |
| | To Bank A/c | | | 10,000 | Voucher | Bank Accounts |
| 10 | Cash A/c | Dr. | 5,000 | | Receipt | Cash-in-Hand |
| | To Rony A/c | | | 5,000 | Voucher | Sundry Debtors |
| 11 | Salaries A/c | Dr. | 6,000 | | Payment | Indirect Expenses |
| | To Bank A/c | | | 6,000 | Voucher | Bank Accounts |
| 12 | Wages A/c | Dr. | 3,000 | | Payment | Direct Expenses |
| | To Cash A/c | | | 3,000 | Voucher | Cash-in-Hand |
| 13 | Stationery A/c | Dr. | 4,000 | | Journal | Indirect Expenses |
| | To Pandian Ltd. A/c | | | 4,000 | Voucher | Sundry Creditors |

Tally.ERP 9–ல் நடவடிக்கைகளை பதிவு செய்வதற்கு, கீழ்க்காணும் படி நிலைகளை பின்பற்ற வேண்டும்.



12th-Accountancy-Unit-10.indd 338 1/4/2020 3:50:41 PM

## 1. நிறுவனத்தை உருவாக்குவதற்கு

Company Info > Create Company

Robert என்று பெயரிட்டு, மீதமுள்ள விவரங்களை அப்படியே வைத்துக்கொண்டு 'Yes' தெரிவு செய்யவும்.




படம் 10.9 நிறுவனத்தை உருவாக்குதல்

## 2. கணக்குகளை மட்டும் பராமரிக்க

Gateway of Tally > F11 Accounting Features > General > Maintain accounts only: Yes > Accept Yes




படம் 10.10 கணக்கின் பண்புகூறுகள்

### 3. பேரேட்டு கணக்குகளை உருவாக்குவதற்கு

Gateway of Tally > Masters > Accounts Info > Ledgers > Single Ledger > Create




படம் 10.11 பேரேடு உருவாக்குதல்

**(i) ராபர்ட் முதல் க/கு உருவாக்குவதற்கு**

Name (பெயர்): Robert's Capital A/c

Under (கீழ்வருபவை): Capital Account

Accept (ஏற்க): Yes (ஆம்)




படம் 10.12 முதல் க/கு உருவாக்குதல்

**(ii) பாரத ஸ்டேட் வங்கி க/கு உருவாக்குவதற்கு**

Name: State Bank of India A/c

Under: Bank Accounts

Accept: Yes




படம் 10.13 பாரத ஸ்டேட் வங்கி க/கு உருவாக்குதல்



12th-Accountancy-Unit-10.indd 340 1/4/2020 3:50:41 PM

**(iii) அறைகலன் க/கு உருவாக்குவதற்கு**

Name: Furniture A/c
Under: Fixed Assets
Accept: Yes




படம் 10.14 அறைகலன் க/கு உருவாக்குதல்

**(iv) கொள்முதல் க/கு உருவாக்குவதற்கு**

Name: Purchases A/c
Under: Purchase
Accept: Yes




படம் 10.15 கொள்முதல் க/கு உருவாக்குதல்

**(v) மொகைதீன் க/கு உருவாக்குவதற்கு**

Name: Mohaideen A/c
Under: Sundry Creditors
Accept: Yes




படம் 10.16 மொகைதீன் க/கு உருவாக்குதல்

**(vi) விற்பனை க/கு உருவாக்குவதற்கு**

Name: Sales A/c
Under: Sales Accounts
Accept: Yes




படம் 10.17 விற்பனை க/கு உருவாக்குதல்



12th-Accountancy-Unit-10.indd 341 1/4/2020 3:50:42 PM

**(vii) ரோனி க/கு உருவாக்குவதற்கு**

Name: Rony A/c
Under: Sundry Debtors
Accept: Yes



படம் 10.18 ரோனி க/கு உருவாக்குதல்

**(viii) சம்பளம் க/கு உருவாக்குவதற்கு**

Name: Salaries A/c
Under: Indirect Expenses
Accept: Yes



படம் 10.19 சம்பளம் க/கு உருவாக்குதல்

**(ix) கூலி க/கு உருவாக்குவதற்கு**

Name: Wages A/c
Under: Direct Expenses
Accept: Yes



படம் 10.20 கூலி க/கு உருவாக்குதல்

**(x) எழுதுபொருள் க/கு உருவாக்குவதற்கு**

Name: Stationery A/c
Under: Indirect Expenses
Accept: Yes



படம் 10.21 எழுதுபொருள் க/கு உருவாக்குதல்



12th-Accountancy-Unit-10.indd 342 1/4/2020 3:50:42 PM

(xi) **பாண்டியன் நிறுமம் க/கு உருவாக்குவதற்கு**

Name: Pandian Ltd. A/c
Under:Sundry Creditors
Accept: Yes



படம் 10.22 பாண்டியன் நிறுமம் க/கு உருவாக்குதல்

4. **நடவடிக்கைகளை சான்றாவணம் மூலம் பதிவு செய்வதற்கு**

Gateway of Tally > Transactions > Accounting Vouchers

(1) **ராபர்ட் ₹ 1,00,000 முதலுடன் போக்குவரத்து தொழில் துவங்கினார்.**

F6: Receipt voucher
Account (கணக்கு): Cash
Particulars (விவரம்):
Robert's Capital A/c
(ஏற்கனவே உருவாக்கிய பேரேட்டு கணக்கு பட்டியலில் இருந்து தெரிவு செய்யவும்)
முதல் தொகையை பதிவு செய்யவும்: ₹ 1,00,000
Narration (விளக்கக் குறிப்பு): Capital introduced
Accept Yes.



படம் 10.23 பெறுதல் சான்றாவணம் உருவாக்குதல்

(2) **பாரத ஸ்டேட் வங்கியில் கணக்கு துவங்கப்பட்டு ₹ 30,000 வைப்பு வைக்கப்பட்டது.**

F4: Contra voucher
Account: State Bank of India
Particulars: Cash
Amount: ₹ 30,000
Narration: Opened bank account in SBI
Accept Yes



படம் 10.24 காண்ட்ரா சான்றாவணம் உருவாக்குதல்

(3) ஹரக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ₹ 10,000

F5: Payment voucher
Account: Cash
Particulars: Furniture A/c
Amount: ₹ 10,000
Narration: Furniture bought by cash
Accept Yes



படம் 10.25 செலுத்தல் சான்றாவணம் உருவாக்குதல்

(4) மொகைதீனிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 20,000

F9: Purchase voucher
Party A/c name: Mohaideen A/c
Particulars: Purchases A/c
Amount: ₹ 20,000
Narration: Goods purchased on credit from Mohaideen
Accept Yes



படம் 10.26 கொள்முதல் சான்றாவணம் உருவாக்குதல்

(5) ஹரக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 8,000

F8: Sales voucher
Account: Cash
Particulars: Sales A/c
Amount: ₹ 8,000
Narration: Cash sales made
Accept Yes



படம் 10.27 விற்பனை சான்றாவணம் உருவாக்குதல்

(6) ரத்தினத்திடமிருந்து சரக்கு வாங்கி பணம் வைப்பு இயந்திரம் மூலம் செலுத்திய தொகை ₹ 5,000

F9: Purchase voucher
Account: Cash
Particulars: Purchases A/c
Amount: ₹ 5,000
Narration: Cash purchases made
Accept Yes



படம் 10.28 கொள்முதல் சான்றாவணம் உருவாக்குதல்

(7) ரோனிக்கு கடனுக்கு சரக்கு விற்கப்பட்டது ₹ 60,000

F8: Sales voucher
Party A/c name: Rony A/c
Particulars: Sales A/c
Amount: ₹ 60,000
Narration: Goods sold on credit to Rony
Accept Yes



படம் 10.29 விற்பனை சான்றாவணம் உருவாக்குதல்

(8) அலுவலகப் பயனுக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது ₹ 9,000

F4: Contra voucher
Account: Cash
Particulars: State Bank of India A/c
Amount: ₹ 9,000
Narration: Cash withdrawn from bank
Accept Yes



படம் 10.30 காண்ட்ரா சான்றாவணம் உருவாக்குதல்

(9) மொகைதீனுக்கு காசோலை மூலம் பகுதி தொகை செலுத்தியது ₹ 10,000

F5: Payment voucher
Account: State Bank of India
Particulars: Mohaideen A/c
Amount: ₹ 10,000
Narration: Payment made to Mohaideen by cheque
Accept Yes




படம் 10.31 செலுத்தல் சான்றாவணம் உருவாக்குதல்

(10) ரோனி பகுதி தொகையை ரொக்கமாக செலுத்தியது ₹ 5,000

F6: Receipt voucher
Account: Cash
Particulars: Rony A/c
Amount: ₹ 5,000
Narration: Cash received from Rony
Accept Yes.




படம் 10.32 பெறுதல் சான்றாவணம் உருவாக்குதல்

(11) பணியாளர்களுக்கு மின்னனு பரிவர்த்தனை மூலம் செலுத்திய சம்பளம் ₹ 6,000

F5: Payment voucher
Account: State Bank of India
Particulars: Salaries A/c
Amount: ₹ 6,000
Narration: Salaries paid through ECS
Accept Yes




படம் 10.33 செலுத்தல் சான்றாவணம் உருவாக்குதல்



12th-Accountancy-Unit-10.indd 346
1/4/2020 3:50:43 PM

(12) ரொக்கமாக கூலி செலுத்தியது ₹ 3,000

F5: Payment voucher
Account: Cash
Particulars: Wages A/c
Amount: ₹ 3,000
Narration: Wages paid by cash
Accept Yes



படம் 10.34 செலுத்தல் சான்றாவணம் உருவாக்குதல்

(13) பாண்டியன் வரையறு நிறுமத்திடமிருந்து எழுதுபொருள் கடனுக்கு வாங்கியது ₹ 4,000

F7: Journal voucher
Particulars: Stationery
Amount: ₹ 4,000
To Pandian Ltd.
Amount: ₹ 4,000
Narration: Stationery bought on credit from Pandian Ltd.
Accept Yes



படம் 10.35 உரிய குறிப்பேடு சான்றாவணம் உருவாக்குதல்

5. அறிக்கைகளை பார்வையிட

(i) இருப்பாய்வை பார்வையிட

Gateway of Tally > Reports > Display > Trial Balance > AltF1 (detailed)



| Particulars | Robert For 1-Apr-2018 Closing Balance Debit | Credit |
|---|---|---|
| Capital Account | | 1,00,000.00 |
| Robert's Capital A/c | | 1,00,000.00 |
| Current Liabilities | | 14,000.00 |
| Sundry Creditors | | 14,000.00 |
| Fixed Assets | 10,000.00 | |
| Furniture A/c | 10,000.00 | |
| Current Assets | 1,34,000.00 | |
| Sundry Debtors | 55,000.00 | |
| Cash-in-Hand | 74,000.00 | |
| Bank Accounts | 5,000.00 | |
| Sales Accounts | | 68,000.00 |
| Sales A/c | | 68,000.00 |
| Purchase Accounts | 25,000.00 | |
| Purchases A/c | 25,000.00 | |
| Direct Expenses | 3,000.00 | |
| Wages A/c | 3,000.00 | |
| Indirect Expenses | 10,000.00 | |
| Salaries A/c | 6,000.00 | |
| Stationery A/c | 4,000.00 | |
| Grand Total | 1,82,000.00 | 1,82,000.00 |

படம் 10.36 இருப்பாய்வு



12th-Accountancy-Unit-10.indd 347 1/4/2020 3:50:43 PM

(ii) இலாப நட்டக் கணக்கை பார்வையிட

F10: A/c Reports > Profit & Loss A/c > AltF1 (detailed)

அல்லது

Gateway of Tally > Reports > Profit & Loss A/c > AltF1 (detailed)




படம் 10.37 இலாப நட்டக் கணக்கு

(iii) இருப்புநிலைக் குறிப்பை பார்வையிட

F10: A/c Reports > Balance Sheet > AltF1 (detailed)

அல்லது

Gateway of Tally > Reports > Balance Sheet > AltF1 (detailed)




படம் 10.38 இருப்புநிலைக் குறிப்பு

(iv) விகிதப் பகுப்பாய்வை பார்வையிட

F10: A/c Reports > Ratio Analysis

அல்லது

Gateway of Tally > Reports > Ratio Analysis



| Principal Groups | Robert For 1-Apr-2018 | Principal Ratios | Robert For 1-Apr-2018 |
|---|---|---|---|
| Working Capital | 1,20,000.00 Dr | Current Ratio | 9.57 : 1 |
| (Current Assets-Current Liabilities) | | (Current Assets : Current Liabilities) | |
| Cash-in-Hand | 74,000.00 Dr | Quick Ratio | 9.57 : 1 |
| Bank Accounts | 5,000.00 Dr | (Current Assets-Stock-in-Hand : Current Liabilities) | |
| Bank OD A/c | | Debt/Equity Ratio | 0.00 : 1 |
| | | (Loans (Liability) : Capital Account + Nett Profit) | |
| Sundry Debtors | 55,000.00 Dr | | |
| (due till today) | 55,000.00 Dr | Gross Profit % | 58.82 % |
| Sundry Creditors | 14,000.00 Cr | Nett Profit % | 44.12 % |
| (due till today) | 14,000.00 Cr | Operating Cost % | 55.88 % |
| | | (as percentage of Sales Accounts) | |
| Sales Accounts | 68,000.00 Cr | | |
| Purchase Accounts | 25,000.00 Dr | Recv. Turnover in days | 0.92 days |
| Stock-in-Hand | | (payment performance of Debtors) | |
| Nett Profit | 30,000.00 Cr | Return on Investment % | 23.08 % |
| Wkg. Capital Turnover | 0.57 | (Nett Profit / Capital Account + Nett Profit ) | |
| (Sales Accounts / Working Capital) | | Return on Wkg. Capital % | 25.00 % |
| Inventory Turnover | 0.00 | (Nett Profit / Working Capital) % | |
| (Sales Accounts / Closing Stock) | | | |

படம் 10.39 விகிதப் பகுப்பாய்வு

(v) நாளேட்டை பார்வையிட

F10: A/c Reports > Day Book > AltF1 (detailed)

அல்லது

Gateway of Tally > Reports > Display> Day Book > AltF1 (detailed)



Day Book — For 1-Apr-2018

